# THE CHALLENGES AND THE RELEVANT SOLUTIONS FOR THE PROBLEMS FACED BY SAMURDHI BANIFICIERS, IN ENHANCING VILLAGE LEVEL HOUSEHOLD INCOME: A STUDY BASED ON MALAYADIGIRAMAM - 03 SAMMANTHURAI DIVISION

**M.H. Risla Banu[205] & M.M.S. Hajara[206]**

Correspondence: mhrisla97@gmail.com

ABSTRACT

Various types of poverty Awareness programmes are being carried out worldwide concerning the challenge of complete poverty. As a developing country, Sri Lanka is also consistently implementing poverty reduction projects Such as Food stamp scheme, Janasaviya and Samurdhi to eliminate poverty. Samurdhi is still the best of all implementations in the country. It not only gathers youngsters and poor communities in the rural area into social, economic, developmental sectors but also increases household income. However, the Samurdhi beneficiaries of Malayadi Giramam – 03 of Sammanthurai Divisional secretariat division are facing more challenges in increasing their household income. There was no such research already conducted to ensure it beside this research. Data have been collected using primary and secondary data collection methods to find Samurdhi beneficiaries who face difficulties and challenges in increasing household income in the research area. For the primary data collection questionnaires, interviews and field observations have been conducted and as a secondary datum book, Samurdhi officer's reports, websites, magazines were used. The finding of the research conclude that inactiveness of Samurdhi project and unawareness of the community-led the Samurdhi beneficiaries face difficulties in the study area. This research has become an important base to reduce the identified challenges and raise the people economically and socially.

**Keywords:** household income, poverty alleviation, Samurdhi.

**ஆய்வுச் சுருக்கம்**

உலக நாடுகளில் முழு வறுமையானது மிகவும் பாரிய சவாலாக மாறி வருகின்றமையை கருத்திற் கொண்டு உலகளாவிய ரீதியில் பல்வேறு வறுமை ஒழிப்பு நிகழ்ச்சி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இலங்கையும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடு என்ற வகையில் காலத்திற்கு காலம் உணவு முத்திரை திட்டம், ஜனசவிய திட்டம், சமுர்த்தி திட்டம் என பல்வேறு திட்டங்கள் காலத்திற்கு காலம் வறுமை ஒழிப்பிற்காக அமுல் படுத்தப்பட்டு வந்தன. சமுர்த்தி திட்டமானது இன்றும் கூட நடைமுறையில் உள்ள வறுமை ஒழிப்பு திட்டங்களில் முதன்மையானதாக காணப்படுகின்றது. கிராமிய மட்டத்தில் உள்ள இளம் ஆண்கள், பெண்கள் குறைந்த அனுகூலம் வாய்ந்த பகுதியினர் ஆகியோரை பொருளாதார, சமூக, அபிவிருத்திச் செயற்பாடுகளினுள் ஒன்றிணைப்பதோடு வீட்டுத்துறை வருமானத்தை உயர்த்துவதிலும் இத்திட்டமானது பாரிய பங்காற்றி வருகின்றது. எனினும் அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட மலையடிக்கிராமம் - 03 இல் உள்ள சமுர்த்தி பயனாளிகள் வீட்டுத்துறை வருமானத்தை முறையாக பெற்றுக்கொள்வதில் பல்வேறு சவால்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனை இணங்காணும் வகையில் எவ்வித ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே இவ் ஆய்வு இடைவெளியை பூரணப்படுத்துவதற்காகவே

[205] Department of Geography, South Eastern University of Sri Lanka.
[206] Department of Economics and Statistics, South Eastern University of Sri Lanka.

இப்பிரதேசத்தில் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வுப்பிரதேசத்தில் கிராமிய வீட்டுத்துறை வருமானத்தை அதிகரிப்பதில் சமுர்த்தி பயனாளிகள் எதிர் நோக்கும் சவால்களை இணங்காண்பதை நோக்கமாக கொண்டு இவ் ஆய்வினை மேற்கொள்வதற்காக முதலாம் நிலைத்தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தி தரவுகள் சேகரிக்கப்பட்டன. முதலாம் நிலைத்தரவுகளாக வினாக்கொத்து, நேர்காணல், நேரடி அவதானிப்பு ஆகிய முறைகளும் இரண்டாம் நிலைத்தரவுகளாக நூல்கள், ஆய்வுப்பிரதேச சமுர்த்தி உத்தியோகத்தரின் அறிக்கைகள், இணையத்தளங்கள், சஞ்சிகைகள் என்பனவும் பயன்படுத்தப்பட்டன. ஆய்வில் இறுதியாக கண்டுகொள்ளப்பட்ட விடயம் என்னவெனில் ஆய்வுப்பிரதேசத்தில் நடைமுறையில் காணப்படும் சமுர்த்தி செயற்திட்டத்தின் வினைத்திறனற்ற செயற்பாடுகள், சமுர்த்தி பற்றிய மக்களின் விளிப்புணர்வற்ற செயற்பாடுகளாலும் பாரிய சவால்களை சமுர்த்தி பயனாளிகள் எதிர் கொள்கின்றனர் என்பதாகும். இவ்வாறான சவால்களை குறைப்பதற்கும் பொருளாதார மற்றும் சமூக ரீதியில் மேலோங்க செய்வதற்கும் இவ் ஆய்வானது முக்கிய களமாக அமைந்துள்ளது.

**துணைச்சொற்கள்** - சமுர்த்தி , வீட்டுத்துறை வருமானம், வறுமை ஒழிப்பு

## ஆய்வின் அறிமுகம்

உலகநாடுகளில் மக்கள் எதிர் நோக்கும் பாரிய சவாலாக வறுமையானது திகழ்கின்றது.இந்நிலைக்கு மக்களது வாழ்வாதார தேவைகளை நிறைவேற்றுவதற்கு போதியளவான வருமானத்தை தரக்கூடிய வேலையின்மையே பிரதான காரணியாக திகழ்கின்றது. 'எப்படியாயினும் வறுமை என்பது போதுமான வருமானத்தின் தேவையாகும்' (பேராசிரியர் டண்டேகர்,1981). ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டமானது வறுமையினை வரைவிலக்கணப்படுத்தும் போது 'மனிதன் உயிர் வாழ்வதற்கு தேவையான குறைந்தபட்ச தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு வருமானத்தை கொண்டிருக்காத நிலைமையே வறுமை ஆகும்.' என குறிப்பிடுகின்றது (றமீஸ் அபூபக்கர்,2018).

இலங்கையில் இத்தகைய வறுமையை குறைப்பதற்காக உணவு முத்திரை திட்டம், ஜனசவிய திட்டம், சமுர்த்தி திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் காலத்திற்கு காலம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் 1995 ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் கீழ் இலங்கை சமுர்த்தி அதிகார சபையானது ஸ்தாபிக்கப்பட்டு அதன் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட சமுர்த்தி திட்டமானது இன்றும் கூட நடைமுறையில் உள்ளது. இத் திட்டமானது 'கிராம மட்டத்தில் உள்ள இளம் ஆண்கள், பெண்கள் குறைந்த அணுகூலம் வாய்ந்த பகுதியினர் ஆகியோரை பொருளாதார, சமூக, அபிவிருத்திச் செயற்பாடுகளினுள் ஒன்றிணைக்கும் நோக்குடன் இது உருவாக்கப்பட்டது. மேலும் சமூக உறுதிப்பாட்டை மேம்படுத்துவதற்கும் வறுமையை ஒழிப்பதற்கும் அதனோடு தொடர்புடைய அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான செயற்திட்டமாகும்.' (முகம்மட் நௌபல், 2013 ).

சமுர்த்தி திட்டமானது குடும்ப மட்டத்திலான வறுமை ஒழிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தில் இன்றியமையாத ஒன்றாக தற்காலத்தில் திகழ்கின்றது. இந்நிகழ்ச்சியின் மூலம் சமுதாயத்தின் ஒதுக்கப்பட்ட கூட்டத்தினரின் பிரச்சினைகளை கண்டுணர்ந்து அவர்களின் பொருளாதாரத்தை உயர்த்தி மேம்பாட்டிற்கு பாடுபடுவது இலங்கை சமுர்த்தி அதிகார குழுமத்தின் நோக்கமாகும். இந்நோக்கத்தின் கீழ் சமுர்த்தி ஆணையாளர் நாயகத்திணைக்களம் ஒன்று உருவாக்கப்பட்டு அதன் செயற்பாடுகள் மாவட்டங்கள் தோறும் பிரதேச செயலகங்கள் தோறும் பரவலாக்கம் செய்யப்பட்டு அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளது என்பது இங்கு முக்கியமான அம்சமாகும்.

இலங்கையினைப் பொறுத்த வரையில் சமுர்த்தி அதிகார சபையின் கீழ் 22 மாவட்டங்களில் 316 பிரதேச செயலகங்கள் தெரிவு செய்யப்பட்டு 316 மகா

சங்கங்கள் உருவாக்கப்பட்டு 14,008 கிராம நிலதாரி பிரிவுகளின் கீழ் 1,576,876 குடும்பங்களிற்கு சமுர்த்தி வேலைத்திட்டமானது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

சமுர்த்தி அதிகார சபையானது வறுமை குன்றிய சுபீட்சமிகு ஓர் இலங்கையை கட்டியெழுப்புதல் என்ற இலக்கினை அடையும் பொருட்டு கிராம அபிவிருத்தி பிரிவு, வாழ்வாதார அபிவிருத்தி பிரிவு (சந்தைப்படுத்தல் பிரிவு, கைத்தொழில், விவசாய பிரிவு, மீன்பிடி மற்றும் கால்நடை வளர்ப்பு பிரிவு), வங்கிநிதிப் பிரிவு, சமூக அபிவிருத்திப் பிரிவு ,மகாசங்கப்பிரிவு, மனித வள மற்றும் தாபன அபிவிருத்திப்பிரிவு , ஊடகப்பிரிவு. நிதிப்பிரிவு, கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவு போன்ற பல பிரிவுகளை கொண்டு செயலாற்றுகின்றது.

ஆய்வுப்பிரதேசமானது அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 51 கிராம நிலதாரி பிரிவுகளில் பின்தங்கியதொரு கிராமமாகும். இங்கு 227 குடும்பங்கள் சமுர்த்தி வேலைத்திட்டங்களை பெற தகுதி பெற்ற நிலையில் காணப்படுகின்றது.

குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கையையும் மாதாந்த வருமானத்தையும் அடிப்படையாக கொண்டு (3500/-, 2500/-, 1500/-, 420/-) ஆகிய நான்கு தொகைகளின் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்ற உதவித்தொகையினை ஆய்வுப்பிரதேசத்தில் சமுர்த்தி பெறக்கூடிய 227 குடும்பங்களில் 112 குடும்பங்கள் 3500 ரூபாவையும் 4 குடும்பங்கள் 2500 ரூபாவையும் 91 குடும்பங்கள் 1500 ரூபாவையும் 420 ரூபாவை 20 குடும்பங்களும் பெறுகின்றனர்.

இவ்வாறு வழங்கப்படுகின்ற உதவித் தொகையிலிருந்து வைப்பில் இடப்படுகின்ற 100/- சமூக பாதுகாப்பு நடவடிக்கைக்காக பயன்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் வறிய குடும்பங்களில் உள்ளவர்களின் மரணம், திருமணம், பிள்ளைபேறு மற்றும் மருத்துவம் போன்றவற்றிற்கான செலவுகளை ஈடுசெய்யும் நோக்கில் வழங்கப்படுகின்றது. சமுர்த்தி பெறக் கூடிய குடும்பத்தில் அங்கத்தவர் ஒருவர் மரணித்தால் அவரது மரண சடங்கிற்காக ரூபா 15000 வழங்கப்படுகின்றது. இது போன்று ஒரு திருமணத்திற்கு ரூபா 7500 வழங்கப்படுகின்றது. மணமகன், மணமகள் இருவரும் சமுர்த்தி பெறக்கூடிய குடும்பமாயின் இரு குடும்பங்களுக்கும் வழங்கப்படும். ஆனால் ஆயுளில் 2 திருமணத்திற்கு மாத்திரமே வழங்கப்பட்டு வருகின்றது.

சமுர்த்தி பயனாளியின் குடும்பத்தில் பிள்ளை பெறுகையின் போது ஒரு பிள்ளைக்கு ரூபா 5000 வழங்கப்படுகின்றது. இத் தொகை 1ம், 2ம் குழந்தைகளுக்கு மாத்திரம் வழங்கப்படுகின்றது. மேலும் குடும்ப உறுப்பினர் ஒருவர் 5 நாட்களுக்கு மேல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டால் நாளொன்றிற்கு ரூபா 250 வீதம் வழங்கப்படும்.

மேலும் சமூக பாதுகாப்பு வேலைத்திட்டத்தின் ஊடாக வறிய குடும்பங்களில் உள்ள பிள்ளைகளின் உயர் கல்வியை தொடர்வதற்காக ‘சிப்தொர’ எனும் புலமைப்பரிசில் வழங்கப்படுகின்றது. இது ஒரு மாணவருக்கு ரூபா 1000 வீதம் 21 மாதங்களுக்கு வழங்கப்படுகின்றது.

குறைந்த வருமானம் பெறுபவர்கள், ஊனமுற்றவர்கள், கணவனை இழந்த விதவைகள், நிரந்தர நோய்களை கொண்ட அதிக பெண் பிள்ளைகள் கொண்ட குடும்பங்களுக்காக வீடு கட்டி கொடுக்கப்படுகின்றது.

சமுர்த்தி வங்கியானது மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடனும் அவர்களிடையே சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் முகமாகவும் நல்லதொரு கடன் கலாசாரத்தை ஏற்படுத்துவதற்காகவுமே செயற்பட்டு வருகின்றது.


இவ்வங்கியின் ஊடாக சுயதொழில்கடன், வீடமைப்புக்கடன், வாழ்வாதார அபிவிருத்திக்கடன், விவசாய கடன் மற்றும் இடர்கடன் என்பன வழங்கப்படுகின்றன.

250000/- தொடக்கம் 500000/- வரை சமுர்த்தி வங்கிகளின் ஊடாக சமுர்த்தி பயனாளிகளின் தொழில்களை விருத்தி செய்வதற்காக வழங்கப்படுகின்றது. இவற்றிற்கு பிணையாக சமுர்த்தி சிறுகுழுக்களிலுள்ள ஏனைய பயனாளிகளே தெரிவு செய்யப்படுகின்றனர். இக்கடன்கள் வழங்கப்படும் போது உரிய பயனாளிகளின் பங்குத்தொகை மற்றும் அவர்களின் குழு நிதியமும் கட்டாயம் கருத்திற் கொள்ளப்படுகின்றது.


இவ்வாறான பல திட்டங்கள் சமுர்த்தி பெறக்கூடியவர்களுக்கு பயனளிப்பதை நோக்கமாக கொண்டு காணப்படுகின்ற போதிலும் ஆய்வுப்பிரதேசத்தில் உள்ள சமுர்த்தி பயனாளிகள் இதனை முறையாக பெற்றுக் கொள்வதில் பல்வேறு சவால்களை எதிர் கொள்கின்றனர்.

**ஆய்வுப்பிரதேசம்**

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பின் தங்கிய கிராமங்களில் ஒன்றே மலையடிக்கிராமம் - 3 ஆகும். இது 0.320 சதுர கிலோமீற்றர் பரப்பளவை கொண்டது. மொத்த சனத்தொகை 1974 யை உள்ளடக்கியதாக 568 குடும்பங்களை கொண்டு காணப்படுகின்றது.




Retrieved from: Arc GIS




மூலம் : சம்மாந்துறை பிரதேச செயலகம்.

### ஆய்வுப்பிரச்சினை

வறுமை ஒழிப்பு நிகழ்ச்சி திட்டங்களில் ஒன்றான சமுர்த்தி (சுவீட்சம்) திட்டமானது வீட்டுத்துறை வருமானத்தை அதிகரிப்பதை நோக்கமாக கொண்டு இயங்குகின்ற போதிலும் அதனை பொதுமக்கள் முறையாக பெற்றுக் கொள்வதில் பல்வேறு சவால்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனலாம். அந்தவகையில் ஆய்வுப்பிரதேசமான சம்மாந்துறை மலையடிக்கிராமம் - 03 யைச் சேர்ந்த மக்கள் சமுர்த்தியினால் நன்மையடைந்த போதிலும் நடைமுறையில் பாரிய சவால்களை எதிர் நோக்கி வருகின்றனர். இது பல்வேறு சமூக சிக்கலையும் ஏற்படுத்தி விடுகிறது. இதுவே இவ் ஆய்வினுடைய பிரச்சினையாகும்.

### ஆய்வின் நோக்கம்

மலையடிக்கிராமம் -03 இல் உள்ள சமுர்த்தி பயனாளிகள் அவர்களின் வீட்டுத்துறை வருமானத்தை அதிகரிப்பதில் எதிர் நோக்கும் சவால்களை இணங்காண்பதே இவ் ஆய்வினுடைய நோக்கமாகும்.

### ஆய்வு முறையியல்

ஆய்வினை திறன்பட செய்து முடிக்க ஆய்வுடன் தொடர்புடைய தரவுகள் இன்றியமையாததாகும். இவ்வாய்வினை சீராக செய்வதற்கு முதலாம் நிலைத்தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். முதலாம் நிலை தரவுகளாக வினாக்கொத்து, நேர்காணல், நேரடி அவதானிப்பு ஆகிய முறைகள் பயன்படுத்தப்பட்டன. வினாக்கொத்தானது சம்மாந்துறை பிரதேசசெயலக பிரிவிற்கு உட்பட்ட மலையடிக்கிராமம் - 03 ஐ சேர்ந்த 568 குடும்பங்களில் சமுர்த்தி பெற தகுதி பெற்ற 227 குடும்பங்களில் 30 குடும்பங்களுக்கு எளிய எழுமாற்று அடிப்படையின் மூலம் வழங்கப்பட்டு அதில் 25 கிடைக்கப்பெற்று தரவுகள் பெறப்பட்டன. அத்துடன் சம்மாந்துறை பிரதேசசெயலக பிரிவிற்கு உட்பட்ட

மலையடிக்கிராமம் - 03 ஐ சேர்ந்த சமுர்த்தி பெறக்கூடிய குடும்பங்களிற்குச்சென்று நேரடி அவதானிப்புக்களை மேற்கொண்டதுடன் அங்குள்ள 10 குடும்ப அங்கத்தவர்களிடமும் ஆய்வுப்பிரதேசத்துக்கு பொறுப்பான கிராம நிலதாரி, சமுர்த்தி உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தரிடமும் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டது. இரண்டாம் நிலைத்தரவுகளாக நூல்கள், மலையடிக்கிராம சமுர்த்தி உத்தியோகத்தரின் அறிக்கைகள், இணையத்தளங்கள், சஞ்சிகைகள் என்பவற்றின் மூலமும் தரவுகள் பெறப்பட்டன.

**தரவுகளை முன்வைத்தலும் பகுப்பாய்வும்**

ஆய்வு ஒன்றினை மேற்கொள்ளும் போது அந்த ஆய்வின் பிரதான பகுதியாக தரவுகளை முன்வைத்தலும் பகுப்பாய்வும் காணப்படுகின்றது.

இவ் ஆய்வுக்காக வினாக்கொத்து வழங்குதல், நேர்காணல் முறை மற்றும் நேரடி அவதானிப்பு போன்ற முறைகள் ஆய்வு நுட்பங்களாக பயன்படுத்தப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டதுடன் அங்குள்ள குடும்ப தலைவர்களிடம் வினாக்கொத்துக்களை வழங்கி தரவுகள் சேகரிக்கப்பட்டது. மேலும் அப்பிரதேசத்தில் உள்ள சமுர்த்தி உத்தியோகத்தரிடம் சென்று நேர்காணல் மூலமும் மலையடிக்கிராமம் - 03 ற்கு சென்று நேரடி அவதானிப்புக்களை மேற்கொண்டதன் மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டன. வினாக்கொத்தில் விடையளித்தவர்கள், நேர்காணலில் பதிலளித்தவர்கள் போன்றோர்களின் எண்ணிக்கையை கொண்டும் முடிவுகள் பெறப்பட்டு ஆய்வு முடிவுகளை இலகுவாக விளங்கி கொள்வதற்காக அட்டவணைகள் மூலமாக அவை முன்வைக்கப்பட்டுள்ளன.

**கலந்துரையாடலும் முடிவுகளும்**

**சமுர்த்தி பயனாளிகள் எதிர் நோக்கும் பிரச்சினைகள்.**

**1. கொடுப்பனவுகளை பெறுவதில் காலதாமதம்.**

சமுர்த்தி உதவித்தொகையானது மாதாந்தம் வழங்கப்படும் ஒரு உதவித்தொகையாக காணப்படுகின்றது. ஆய்வுப்பிரதேசத்திலுள்ள மக்கள் வறுமைக்கோட்டின் கீழ் காணப்படுகின்றவர்கள் என்பதனால் அவர்கள் தமது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்வதற்கு சமுர்த்தி உதவித்தொகையை மிகவும் எதிர்பார்த்தவர்களாகவே இருக்கின்றனர். ஆனால் இத்தொகையானது மாதாந்தம் வழங்கப்படுவதில் காலதாமதம் ஏற்படுகின்றது. அதாவது ஒவ்வொரு மாதமும் பெற வேண்டிய தொகையை 3 அல்லது 4 மாதங்களின் பின் பெறுவதனால் அவர்களது அன்றாட தேவைகளை சிறந்த முறையில் திட்டமிட்டு நிறைவேற்ற முடியாத நிலை ஏற்படுகின்றது.மேலும் ஆய்வுப்பிரதேசத்தில் உள்ளவர்களின் பிள்ளைகளின் கல்விக்கான செலவு, மருத்துவ செலவு என்பவற்றிற்கும் இத்தொகையையே இவர்கள் நம்பி வாழ்கின்ற படியால் இவ் உதவித்தொகையானது உரிய காலத்திற்குள் கிடைக்கப்பெறாவிடின் அடகுவைத்தல், கடன்வாங்குதல் என பல்வேறு இடர்களை எதிர்நோக்க வேண்டிய நிலைக்கு ஆளாகின்றனர். எனவே தான் காலதாமதமானது சமுர்த்திபயனாளிகள் எதிர்நோக்கும் அடிப்படை பிரச்சினையாக காணப்படுகின்றது.

**2. சமுர்த்தி உத்தியோகத்தினரின் பொறுப்புணர்வு குறைவாக காணப்படுதல்.**

சமுர்த்தி அதிகார சபையின் கீழ் நியமனம் செய்யப்பட்டு இயங்குகின்ற சமுர்த்தி உத்தியோகத்தர் அப்பிரதேசத்திலுள்ள மக்களின் பிரச்சினைகளை இணங்கண்டு அதற்கான வழி வகைகளை செய்து கொடுக்க வேண்டியதும் சமுர்த்தி அதிகார

சபையினால் ஒதுக்கப்பட்டுள்ள நிதிகளை மக்கள் பயனடையும் வகையில் அதற்கான வேலைத்திட்டங்களை தன்னுடைய மேலுள்ள அதிகாரியின் உதவியுடன் முறையாக முன்னெடுப்பதும் அவர்களின் இன்றியமையாத கடமைகளாகும்.ஆனால் மலையடிக்கிராமம் 03 இனைப் பொறுத்த வரையில் இங்குள்ள சமுர்த்தி உத்தியோகத்தர் தன்னுடைய வேலைப்பளு காரணமாக அங்கீகரிக்கப்பட்ட வேலைத்திட்டங்களை (சிறுவர் கெகுலு கழகம் , சிசுதிரிய புலமைப்பரிசில் , சர்வதேச தினங்களை நினைவு படுத்தும் முகமாக நிகழ்வுகளை நடத்தல் ) நடைமுறைப்படுத்தாமலும் இப்பிரதேசத்திலுள்ள வறிய மக்களை இணங்கண்டு அவர்களின் வாழ்வாதார தேவைகளையும் , இன்னல்களையும் குறைப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்வதில் பொறுப்புணர்வற்றவராகவே காணப்படுகின்றார். இதனால் இங்குள்ள மக்கள் சமுர்த்தியினால் நன்மையடைய முயற்சிக்கும் போது பல்வேறு இடர்களை எதிர் நோக்குகின்றனர் என்பது சமுர்த்தி பயனாளிகளிடம் மேற்கொண்ட நேர்காணலில் அறியப்பட்டது.

**3.பயனாளிகளை தெரிவு செய்வதில் சிறந்த திட்டமிடல் இன்மை.**

எந்தவொரு செயற்திட்டத்திற்கும் சிறந்த திட்டமிடலானது இன்றியமையாத ஒன்றாகும். அதற்கேற்ப பயனாளிகளை தெரிவு செய்யும் போது அவர்களது மாதாந்த வருமானம், சொத்துமட்டம், குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை, வாழ்வாதார நிலை என்பவற்றை அடிப்படையாக வைத்து திட்டமிடல் வேண்டும். ஆனால் ஆய்வுபிரதேசத்தில் உள்ள குடும்பத்தவர்களிடையே பயனாளிகளை தெரிவு செய்யும் போது வருமானம் கூடிய குடும்பத்தினர், காணி, வாகன உடைமையாளர்கள் என பல்வேறு பட்ட உயர் வாழ்க்கை தரத்தை உடையவர்கள் சமுர்த்தி பயனாளிகளாக தெரிவு செய்யபட்டிருக்கின்றனர்.மேலும் சமுர்த்தி பெறுவதற்கு தகுதி பெற்ற சிலர் புறந்தள்ளப்பட்டும் உள்ளனர். இவ்வாறு சமுர்த்தி உத்தியோகத்தர் சிறந்த திட்டமிடல் இல்லாது பக்கச்சார்புடன் நடந்து கொள்வது பாரிய சவாலாக உள்ளது என்பதனை அவதானம், வினாக்கொத்து என்பவற்றின் மூலம் உறுதிப்படுத்தக் கூடியதாக காணப்படுகின்றது.

**4. அரசியல் தலையீடுகள்.**

பக்க சார்பற்ற சேவை வழங்கல் என்பது எந்தவிதமான அரசியல் தலையீடுகளும் இன்றி மக்களை சென்றடைய வேண்டும். ஆனால் இங்கு கட்சிளின் தலையீடுகளும் செல்வாக்குகளும் காணப்படுகின்றது எனலாம். உதாரணமாக பயனாளிகளை தெரிவு செய்யும் போது அரசியல் கட்சி சார்பான குடும்பங்களே நன்மையடைகின்றன. இங்கு குடும்ப உறுப்பினர் எண்ணிக்கை, பிரதான தொழில், வருமானம் என்பன அடிப்படையில் பயனாளிகளை தெரிவு செய்வது குறைவாகவே காணப்படுகின்றது.மேலும் தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி பயனாளிகளுக்கு நன்கொடை பொருட்களை வழங்கும் போதும் அரசியல் செல்வாக்கினடிப்படையிலே இது இடம்பெறுகின்றது என்பது நேர்காணலின் போது அறியப்பட்ட விடயமாகும்.

**5. சமுர்த்தி அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பல வேலைத்திட்டங்கள் ஆய்வு பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்படாமை.**

சமுர்த்தி அதிகாரசபையினால் மக்களின் வாழ்வை சுபீட்சமடைய செய்வதற்கு பல்வேறு வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்ட போதிலும் ஒரு சில திட்டங்கள் எமது ஆய்வுப்பிரதேசத்தில் பயனாளிகளை அடையாத வண்ணம் உள்ளன. உதாரணமாக சிறுவர் கெகுலு கழகம், கல்வி முன்னேற்ற செயற்பாடுகள், தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டம், ஊடக வேலைத்திட்டம், சந்தைப்படுத்தல் அபிவிருத்திதிட்டம் என்பவற்றை குறிப்பிடலாம். இவற்றினூடாக இவர்கள் பயனடைவதற்கான வசதிகள் குறைவாக உள்ளதால் இப்பிரதேச சிறுவர்களின் கல்விநிலை அபிவிருத்தி குறைவாகவே உள்ளது. மேலும் சந்தைப்படுத்தல் அபிவிருத்திதிட்டம் நடைமுறைப்படுத்தப்படாமையால் இப்பிரதேசத்தில் உள்ள

மக்களின் கைத்தொழில் விளைபொருட்களை பிரபல்யப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே காணப்படுகின்றது எனலாம்.

**6. சமுர்த்தி செயற்திட்டம் பற்றிய போதிய தெளிவூட்டல் இன்மை.**

ஆய்வுப்பிரதேசமானது கல்வியில் பின்தங்கிய ஒரு களமாக காணப்படுவதனால் இம்மக்கள் மத்தியில் சமுர்த்தி அதிகார சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற சமுர்த்தி திட்டத்தின் நோக்கம், அதன் தொழிற்பாடுகள், சமுர்த்தி பயனாளிகளுக்கு என நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்படும் சேவைகள் பற்றிய அறிவு குறைவாக காணப்படுவதனாலும் இது மட்டுமல்லாது சமுர்த்தி உத்தியோகத்தரும் தன்னுடைய கிராம பிரிவிலுள்ள சமுர்த்தி பயனாளிகளுக்கு சமுர்த்தி திட்டம் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்குகள், செயலமர்வுகளை நடாத்துவதில் பொடுபோக்கு தனமாக செயற்படுவதனாலும் இப்பிரதேசத்தில் உள்ள சமுர்த்தி பயனாளிகளுக்கு சமுர்த்தி செயற்திட்டம் பற்றிய போதிய தெளிவின்மை காணப்படுவதால் இவர்கள் தங்களுக்கான சேவைகளை முழுமையாக பெற முடியாத நிலையிலேயே காணப்படுகின்றனர் என்பது நேர்காணலின் போதும் ,ஆய்வுப்பிரதேசத்தில் மேற்கொண்ட நேரடி அவதானிப்பின் போதும் கண்டு கொள்ளப்பட்டது.

**7. சமுர்த்தி கொடுப்பனவானது மக்களினது அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பற்றாக்குறையாக காணப்படுகின்றமை.**

ஆய்வுப்பிரதேசத்திலுள்ள பெரும்பான்மையான மக்கள் சமுர்த்தி உதவித்தொகையை ஒரு அடிப்படை வருமானமாக கருத்திற் கொண்டு அவர்களது நுகர்வுச்செலவினை தீர்மானிக்கின்றனர். தேவைகளை பூர்த்தி செய்ய கூடிய பொருட்கள், பண்டங்களின் விலை அதிகரித்ததனால் அதிக எண்ணிக்கையான குடும்ப அங்கத்தவர்களை உடைய குடும்பங்களுக்கு அவர்களது அத்தியவசிய தேவைகளான உணவு, மின்சாரக்கட்டணம், மருத்துவம் போன்றவற்றை கூட செயலாற்றுவதற்கு இத்தொகையானது அருமையான ஒன்றாகவே காணப்படுகின்றது. பணவீக்க அதிகரிப்பிற்கேற்ப சமுர்த்தி உதவித்தொகையும் அதிகரிக்காததன் காரணத்தினால் பயனாளிகளின் வாழ்கை தரத்தில் ஒரு முன்னேற்ற நிலையை அடைய முடியாத நிலை காணப்படுவது இப்பிரதேசமக்கள் எதிர்நோக்கும் பாரிய சவாலாக அமைந்துள்ளது.

**8. சமுர்த்தி பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்ற கடனின் அளவு மட்டுப்படுத்தப்பட்டதாக காணப்படுகின்றது.**

சமுர்த்தி பயனாளிகள் சுய தொழில் முயற்சிகளை மேற்கொள்ளல் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் போன்ற பல செயற்திட்டங்களை மேற்கொள்ள கடன் வசதிகள் நடைமுறையில் இருந்தும் கூட ஆய்வுப்பிரதேசத்தில் சமுர்த்தி அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட கடனின் அளவை (250000- 500000) பெற்றுக்கொள்வதில் இம் மக்கள் பல்வேறுபட்ட இடர்களை எதிர்நோக்குகின்றனர். விவசாயத்திற்காக கடன் பெறும் போது அதற்கான வட்டி வீதங்களை கூட ஈடு செய்ய முடியாத அளவிற்கு மக்கள் பாதிப்படையும் சந்தர்ப்பங்களும் உண்டு என்பதை நேர்காணல் மூலம் அறிய முடிகின்றது. இன்னும் உணவு உற்பத்திக்கான உபகரணங்களை கொள்வனவு செய்யும் போது வழங்கப்படும் கடனானது அதனை கிராமிய மட்டத்தில் கூட சந்தைப்படுத்துவதற்கு பற்றாக்குறைவாக காணப்படுகின்றது. மேலும் சிறு தொழில் முயற்சிகளின் போது வழங்கப்படுகின்ற கடன் தொகையானது மூலப்பொருட்கள், இடைத்தர உள்ளீடுகளை கொள்வனவு செய்வதற்கு கூட பற்றாக்குறையாக காணப்படுகின்றமையால் மக்கள் தொழில் முயற்சிகளை கைவிடக்கூடிய நிலையும் இங்கு நிலவுகின்றது. இது மட்டுமல்லாது வீட்டுக்கடன் வசதியை பொறுத்தவரை பெறுகின்ற கடன் தொகையானது வீட்டின் அரைவாசியையேனும் பூர்த்தி செய்ய போதிய அளவில் இல்லை என்பதையும் ஒருசவாலாக இம்மக்கள் கருதுகின்றனர்.

**9. சேமிப்பு பணத்தை மீள பெறுவதில் இடர்பாடுகள்.**

சமுர்த்தி பயனாளிகளிடம் இருந்து மாதாந்தம் 100/- சேமிப்புத் தொகையாக அறவிடப்பட்டு குழு ரீதியாக வைப்பில் இடப்படுகின்றது. இப் பணத்தை பயனாளி ஒரு தேவை ஏற்படும் போது குழுவிலுள்ள ஏனைய அங்கத்தவர்களின் அனுமதியுடனே பெற முடியும். மேலும் தனிப்பட்ட சேமிப்பில் வைப்பிலிடப்பட்ட பணத்தை பெறும் போது வைத்திய அறிக்கை அல்லது தக்க காரணத்துடனான கடிதம் என்பன பெறப்பட்டு அதிகாரிகளின் முடிவிற்கு ஏற்ப சேமிப்பு பணத்திலிருந்து ஓர் பகுதியையே மீளப் பெற முடியும். இது போன்ற இடர்களுக்கு முகங்கொடுப்பதால் மக்கள் சமுர்த்தி வங்கியில் பணத்தை சேமிப்பில் இடுவதில் அதிருப்தி அடைகின்றனர்.

7.2 ***ஆய்வுப்பிரதேசத்தில் வினாக்கொத்தின் ஊடாக முன்வைக்கப்பட்ட சவால்கள்.***

| **சவால்கள்** | **வீதம்** |
|---|---|
| கால தாமதம் | 06 |
| அரசியல் தலையீடு | 02 |
| சமுர்த்தி கொடுப்பனவு போதாமை | 09 |
| சிறந்த திட்டமிடல் இன்மை | 03 |
| கடன் போதாமை | 05 |
| மொத்தம் | 25 |

*(கள ஆய்வு, 2019)*

**ஆய்வின் பரிந்துரைகள்.**

மேற்குறித்த சவால்களை எதிர்கொள்வதற்காக பின்வரும் பரிந்துரைகளை முன்வைக்கலாம்.

- வறுமையை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- மக்களிடத்தில் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவித்தல்.
- மாதாந்த கொடுப்பனவுகளை உரிய காலத்திற்கு கொடுத்தல்
- வருமானமீட்ட கூடிய வகையில் சுயதொழில் செய்ய போதிய அளவு கடன் வழங்கல்.
- வறியவர்களிக்கிடையே சுயநம்பிக்கையை ஊக்குவித்தல்.
- வறியவர்களினை பொருளாதார நிலையில் பலமுள்ள ஒழுங்கமைப்பு ஒன்றின் கீழ் கொண்டு வருதல்.
- அபிவிருத்தியில் மக்களை பங்கேற்க செய்தல்.
- நடைமுறையில் இல்லாத சமுர்த்தி செயற்திட்டங்களை ஆய்வுப்பிரதேசத்தில் செயற்படுத்தல்.

**முடிவுரை**

இவ்வாய்வானது சமுர்த்தியினால் பயனடையும் போது மக்கள் எதிர் கொள்ளும் சவால்களை சம்மாந்துறை பிரதேசசெயலக பிரிவிற்குட்பட்ட மலையடிக்கிராமம் - 3 ஐ மையப்படுத்தி அமைந்துள்ளது. சமுர்த்தியானது கிராமிய வீட்டுத்துறை வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடன் அமுல்படுத்தப்பட்டாலும் அதன் மூலம் மக்கள் பயனடைகின்ற போது பல சவால்களை எதிர் கொண்டே வருகின்றனர். ஆகவே தான் சமுர்த்தியினால் பயனடையும் மக்கள் எதிர் கொள்ளும் சவால்களையும் அவற்றை இழிவளவாக்குவதற்கான பரிந்துரைகளையும் கொண்டு இவ்வாய்வு இடம் பெற்றுள்ளது எனலாம். சமுர்த்தி செயற்திட்டத்தின் வினைத்திறனற்ற செயற்பாடுகள், சமுர்த்தி பற்றிய மக்களின் விளிப்புணர்வற்ற செயற்பாடுகளும் பாரிய சவாலாக சமுர்த்தி பயனாளிகளிடம் காணப்படுகின்றது. எனவே தான் முழு வறுமையை குறைக்கும் நோக்கில் சமுர்த்தி செயற்பாடு, பொறுப்புடைமை ஆகியன சரியான முறையில் அமைவது இன்றியமையாத ஒன்றாகும்.

**உசாத்துணை**


அமிர்தலிங்கம்,k. (2013).*இலங்கை பொருளாதாரம்*, பூபால சிங்கம் வெளியீட்டகம்: கொழும்பு -11

பாலகிருஷ்ணன்,என்.(2006).*இலங்கை பொருளாதார சீர்திருத்தங்கள்* ,இனத்துவ கற்கைகளுக்கான சர்வதேச நிலையம்: கொழும்பு.

றமீஸ் அபூபக்கர். (2018).*சமகால சமூக பிரச்சினைகள்*:சமூகவியல் சங்கம், சமூகவியல் துறை, தென்கிழக்கு பல்கலைக்கழகம்: ஒலுவில்.

நௌபல்,எம்.எம்.(2013). *பிரதேச செயலகங்களினால் வழங்கப்படும் சேவைகள்* , ஆயிஷா வெளியீட்டகம்: மருதமுனை.

பொருளியல் நோக்கு (2000), இதழ் - 8/ 9, மலர் - 26.

http://www.gic.gov.lk/gic/index.php/ta/component/info//id=477&task=info Retreived – 24.07.2019.

http://battinaatham.net/description.php?art=15002 Retrieved – 30.07.2019.

http://lankanewsweb.net/tamil/newstamil/26731-5614-my3-house Retrived - 30.07.2019

http://www.google.com/url?sa=t&source=web&rct=j&url=http://marikumar.blogspot.com/2012/10/blog-post-9258.html%3Fm%3D1&ved=2ahUKEwi7wYmfoKLIAhVJq18KHbQrBI8QFjAAegQIBhAB&usg=AOvVaw2KOH4wk-xrALT-smLOONs&cshid=1571279562807 Retrieved – 17.10.2019

http://www.google.com/url?sa=t&source=web&rct=j&url=http://ta.vikaspedia.in/social-welfare/ba8bbfba4bbf-b9abc7bb0bcdb95bcdb95bc8/baabb0bc1bb3bbeba4bbebb0baebcd/bb5bb1bc1baebcd/bb5bb1bc1baebc8-baebb1bcdbb1bc1baebcd-bb5bc7bb2bc8bafbbfba9bcdbaebc8-poverty-and-unemployment&ved=2ahUKEwjx-f2T0KLIAhV37HMBHY6dBOoQFjAGegQIARAB&usg=AOvVaw3BYq17iBbxfYr7TT1D0ta Retrieved - 18.10.2019